பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 25 புதன்கிழமை 10.08.2022 கதிர் 278

### இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி மாற்றத்தோடு இதுவரை மாவட்டங்கள் தோறும் செயற்பட்டு வந்த மாவட்ட அபிவிருத்தி இணைப்பு குழுக்களும் செயலிழந்து விட்டன.

மாவட்ட இணைப்பு குழுக்கள் செயலிழந்தமை மட்டுமல்ல, அந்த முறைமையே

☞ 2

# காட்டுத் தர்பார் நடத்தும் வடக்கு ஆளுநர்

## நாடாளுமன்றில் கிழித்துத் தொங்கவிட்ட சிறிதரன்

நிர்வாகம் தெரியாத வடக்கு மாகாண ஆளுநர் சரம் கட்டிய சண்டியன் போல் செயற்பட்டு வருகின்றார்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், வடக்கு ஆளுநர் மீது சரமாரியாக விமர்சனக்கணைகளைத் தொடுத்தார்.

ஜீவன் தியாகராஜா எனப் பெயர் இருந்தாலும் வடக்கு ஆளுநருக்குத் தமிழ் தெரியாது. அவர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார். அதிகாரிகளை வலுக்கட்டாயமாக இடமாற்றம் செய்து, காட்டுத் தர்பார் நடத்துகின்றார்.

திட்டமிட்ட அடிப்படையில்தான் அவர் தமிழர் பகுதிக்கான ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரை மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கிழக்கு ஆளுநரும் அப்படித்தான். இவர்களிடம் முறையிட்டுப் பயன் இல்லை – என்றார்.



# சிறைகளை இளைஞர்களால் நிரப்ப முயல்கின்றதா அரசு?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி



இந்த நாட்டில் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்களை வேட்டையாடும் நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளது. 'கோட்டா கோ கம'வில் நிர்மாணிக்கப்பட்ட நூலகத்துடன் தொடர்புடைய இளைஞர்களைக் கைது செய்து விசாரிக்கவும் அரசு முயற்சித்துள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு அரசு இந்நாட்டின் சிறைச்சாலைகளை இளைஞர்களால் நிரப்பும் நோக்கில் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

☞ 4

## கொரோனாவால் மேலும் 6 பேர் சாவு

நாட்டில் மேலும் 6 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்தவர்களில்

☞ 2

## யானை தாக்கி பெண் மரணம்

காட்டு யானை தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கெக்கிராவ – ஹொரபொல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

57 வயதுடைய குறித்த பெண் தனது வீட்டுக்கு அருகிலுள்ள தனது மகனின் வீட்டுக்குச் சென்றிருந்தபோதே இவ்வாறு காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

☞ 2

## ரணில் அரசுக்கு எதிரான போராட்டம்; மக்கள் கூட்டம் அதிகளவில் இல்லை

### தோல்வியடைந்தது பொன்சேகாவின் திட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைக்குமாறு வலியுறுத்தியும் நேற்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பங்குபற்றுதலுடன் பிரதான போராட்டம் நடைபெற்றது.

☞ 4



## தேநீர், உணவுப் பொதி விலைகள் குறைப்பு

உணவகங்களில் தேநீர் மற்றும் உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி தேநீரின் விலையை 30 ரூபாவினாலும், சோற்றுப் பார்சல் விலையை 10 ரூபாவினாலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

சமையல் எரிவாயு, சீனி உள்ளிட்ட

☞ 4

## நாடாளுமன்றத்தைக் காப்பாற்றிய இராணுவத்துக்கு ரணில் பாராட்டு



வன்முறையாளர்கள் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்து சபையை முடக்கியிருந்தால் நாடு ஆட்சியை இழந்திருக்கும். அவ்வாறு நடந்திருந்தால் நாட்டின் நிலைமை முற்றிலும் வேறாக இருந்திருக்கும். நிறைவேற்று அதிகாரத்தை நசுக்கி ஜனநாயகத்தைப் பாதுகாத்து சட்ட சபையை முடக்க

☞ 2

## வவுனியா, மன்னார் நகர சபைகள் மாநகர சபைகளாகத் தரம் உயர்வு

(ந.லோகதயாளன்)

வவுனியா, மன்னார், திருகோணமலை, அம்பாறை நகர சபைகளை மாநகர சபைகளாகத் தரம் உயர்த்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் 7 மாநகர சபைகளையும், 3 நகர சபைகளையும் புதிதாக உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய தற்போதைய நகர சபைகளாக உள்ள களுத்துறை, புத்தளம், திருகோணமலை, வவுனியா, மன்னார், அம்பாறை, கேகாலை ஆகிய நகர சபைகள் என்பன புதிய மாநகர சபைகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன.

அதேவேளை, தற்போது

☞ 2

# அரச அடக்குமுறைக்கு எதிராக சஜித் அணி ஆர்ப்பாட்டம்

அரச அடக்குமுறையை நிறுத்து மாறும் அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறும் கோரி ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற வளாகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாற்றி அமைக்கப்பட இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான மொட்டுக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மைத்திரியின் நல்லாட்சி அரசின் கீழ் தான் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு முறைமை கொண்டுவரப்பட்டது. அந்த முறைமையை மாற்றி, அதற்கு முன்பிருந்த மாவட்ட அபிவிருத்திக்குழு முறைமையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருக்கின்றார் என்றார் அந்தப் பிரமுகர்.

புதிய மாவட்ட அபிவிருத்தி குழு அதிக அதிகாரம் கொண்டதாக இருக்கும். அதன் தலைவர் ஏறத்தாழ அந்த மாவட்டத்திற்குரிய அமைச்சர் போல செயல்பட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவிகளை வடக்கு, கிழக்கில் தமிழ்க் கூட்டமைப்புக்கும் அதிகம் வழங்க ஜனாதிபதி ரணில் விரும்புகின்றார் என்றும், அதற்கு முரண்படாமல் ஒத்துழையுங்கள் என்றும் மொட்டு கட்சியின் தலைமை ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியிருந்தது எனவும், அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணங்கி இருந்தார் எனவும் அவர் சொன்னார்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து தாம் எதிர்பார்த்த சாதகமான பதில் சமிக்ஞை கிடைக்காதமையால் வடக்கில் இரு மாவட்டங்களில் ஒன்றின் தலைமையை நீதியரசர் விக்கினேஸ்வரனிடமும் மற்றொன்றின் தலைமையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் ஒப்படைக்க ஜனாதிபதி ரணில் தீர்மானித்திருக்கின்றார் என்று தெரிகிறது எனவும் அவர் சொன்னார்.

நாட்டில் ஒன்பது மாகாண ஆளுநர்களும் கட்டாயம் மாற்றப்படுகின்றார்கள். அதில் ஐந்து இடங்களுக்கான – குறிப்பாகத் தென் மாகாணம், மத்திய மாகாணம் உட்பட ஐந்து மாகாணங்களுக்கான – ஆளுநர் பதவிகள் மொட்டுக் கட்சி பரிந்துரைக்கும் தரப்புகளுக்கு வழங்கப்படும் என்றார் அவர்.

வடக்கு, கிழக்கு உட்பட ஏனைய 4 மாகாணங்களின் ஆளுநர்களை ஐ.தே.கவின் கருத்துடன் அதன் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே தீர்மானிப்பார் என்றும் அவர் சொன்னார். வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்களும் விரைவில் மாற்றப்படுவது உறுதி என்றும் அடித்துக் கூறினார் அவர். இதே சமயம் பொருளாதாரப் பிரச்சினைக்கு மட்டுமல்ல, நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கும் அரசியல் தீர்வு காண இதுவே முக்கியமான – பொருத்தமான – சந்தர்ப்பம் என்று ஜனாதிபதி கருதுகிறார் எனக் கூறிய அவர், அதற்கான முன் முயற்சிகளும் அடுத்த மூன்று, நான்கு மாதங்களுக்குள் தீர்க்கமாகும் என்றும் கோடி காட்டினார்.

இதற்கிடையில் மொட்டுக் கட்சியின் தேசிய மாநாடு இன்னும் ஒரு வாரத்துக்குள் நடைபெறவிருக்கின்றது. அதில் கட்சியின் முக்கிய நிர்வாகப் பதவிகளில் மாற்றங்கள் வரும் எனத் தெரிகின்றது.

கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவும், செயலாளராக சாகர காரியவாசமும் தொடர்வர். எனினும் கட்சியின் முக்கிய அதிகாரமுள்ள தேசிய அமைப்பாளர் பதவி நாமல் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அந்தப் பதவியை அவரிடம் ஒப்படைத்து விட்டு பஸில் ராஜபக்ஷ பின்னணியில் இருந்து ஒத்துழைப்பார் எனக் கூறப்பட்டது. கட்சியை மறுசீரமைத்து ஒழுங்குபடுத்தும் முழுப் பொறுப்பை நாமல் ராஜபக்ஷவே முழுமையாக முன்னெடுக்க இருக்கிறார். கட்சித் தவிசாளர் பதவி பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிடமிருந்து பறிபோவது நிச்சயம்.

சு.கவின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பியாக மொட்டுக் கட்சியினால் நியமிக்கப்பட்ட வடக்கு முன்னாள் ஆளுநர் சுரேன் இராகவன் மொட்டுக் கட்சியுடன் முழுமையாக இணைகிறார். நடைபெற இருக்கும் தேசிய மாநாட்டில் அவருக்கு மொட்டுக் கட்சியில் முக்கிய பொறுப்பு ஒன்று வழங்கப்பட இருப்பதாகவும் தெரிகின்றது.

தமக்குள் பிளவுபட்டுகுழம்பியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கை அரசியல் செல்நெறியின் போக்கைப் புரிந்து கொள்ளாமல், இப்போது செயலிழந்து போய்க் கொண்டிருக்கும் அறகல்யவை அரவணைத்துக் கொண்டு நின்று, காலத்தையும் வாய்ப்பையும் கோட்டை விடப் போகின்றது என்பதுதான் இதில் உள்ள பரிதாபகரமான நிலைமை. பாவம் தமிழர்கள்.

– மின்னல் –

---

## நாடாளுமன்றத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முயன்ற வன்முறையாளர்களை ஒடுக்கிய இராணுவத்தினருக்குத் தேசத்தின் புகமுரை உரித்தாகும்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெலவத்த, அக்குரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்துக்கு நேற்று முற்பகல் விசேட உத்தியோகபூர்வ விஜயத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி, இராணுவத்தினரைச் சந்தித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத்தைக் கைப்பற்ற வந்த எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தாமல் அமைதியான முறையில் நடவடிக்கையை முன்னெடுத்த பாதுகாப்புப் படையினருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

நாடாளுமன்றத்தைப் பாதுகாத்த உங்கள் அனைவருக்கும் எமது நன்றி யைத் தெரிவிக்கும் வகையில் இன்று இந்த விசேட நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம்.

பலருக்கு இதன் முக்கியத்துவம் தெரியாது. எனவே, இதைப் பற்றி சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த நாட்டைப் பாதுகாப்பதும், இந்த நாட்டின் அரசமைப்பைப் பாதுகாப்பதும் உங்களின் தலையாய கடமையாகும்.

மக்களின் இறையாண்மையை நடைமுறைப்படுத்த மூன்று பிரதான நிறுவனங்கள் உள்ளன. நாடளுமன்றம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை. இந்த மூன்று நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், இந்த நாடு கட்டுப்பாட்டை இழக்கும். அரசமைப்பு சிதைந்து விடும். ஜனநாயகம் இழந்துவிடும். அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நீங்கள் நாடாளுமன்றத்தைப் பாதுகாத்தீர்கள்.

ஜூலை 09, முன்னாள் ஜனாதிபதியின் வீடு வன்முறையாளர்களால் கைப்பற்றப்பட்டது; பின்னர் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைச் செலுத்தும் ஜனாதிபதி அலுவலகம் கையகப்படுத்தப்பட்டது. ஜனாதிபதியிடம் நடைமுறைப்படுத்த எந்த நிறுவனமும் இல்லை.

மாலையில் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகை கையகப்படுத்தப்பட்டது.

அந்த அலுவலகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. அப்போது முன்னாள் ஜனாதிபதி கொழும்பில் இல்லாததாலும், அவர் இருக்கும் இடம் தெரியாததாலும், நான் பதவி விலகுவேன் என்ற நம்பிக்கையில் எனது வீட்டுக்குத் தீ வைத்துள்ளார்கள்.

ஆனால், சேர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் ஒரு பிரதமர் அலுவலகம் மட்டுமே இருந்தது.

கடந்த 13ஆம் திகதி திரும்பி வந்து பிரதமர் அலுவலகத்தைக் கைப்பற்றினர். அப்போது நிர்வாகத்தை இயக்க அலுவலகம் இல்லை. அப்போது ஜனாதிபதி இருந்த ஜனாதிபதி மாளிகையும் இல்லாமல் போய்விட்டது. நிர்வாகியாக இயங்க இடம் கிடைக்கவில்லை. மாலையில் நிலைமை மாறியது.

நாடாளுமன்றத்தை முற்றுகையிட முயன்றனர். நாடாளுமன்றத்தைக் கைப்பற்றினால், சட்டத்தை அமுல்படுத்த முடியாது. சட்டத்தை அமுல்படுத்த முடியாவிட்டால், நாட்டில் ஆட்சி இல்லை.

நீதிமன்றத்தைச் சுற்றிவளைத்து நீதிமன்றத்தை நிறுத்துவது எளிதான காரியம். மற்ற இரண்டு நிறுவனங்களைப் போல் அல்ல. நாடாளுமன்றத்தை இழந்தால் அது பெரிய பிரச்சினையாகி விடும்.

அன்றைய தினம் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. சபாநாயகர், இந்தக் குழு வருவதை அறிந்ததும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தை முடித்து வைத்தார். நாடாளுமன்றத்தைப் பாதுகாக்க யாரும் இல்லை.

நாடாளுமன்றம் வீழ்ந்தால் அரசியல் சாசனம் பறிபோகும். எனவே, அவ்வேளையில் பாதுகாப்புச் சபையின் தலைவர்களிடம் குறிப்பாக சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லியனகே ஆகியோரிடம் நாடாளுமன்றத்தைப் பாதுகாக்குமாறு கூறினேன். நாடாளுமன்றத்தை இழந்தால் ஆட்சி பறிபோகும். நாடாளுமன்றம் இல்லாது போனால் பாதுகாப்பு அமைச்சகத்தை அமுல்படுத்த முடியாது. அதனால் தான் எல்லோரையும் நம்பி அந்த வேலையைச் செய்தார்கள்.

அதன்படி நாடாளுமன்றத்தைக் கைப்பற்ற வந்தவர்களை சுட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன் றியையும் பாராட்டுக்களையும் தெரிவித் துக்கொள்கிறேன். உங்களில் பலர் காயமடைந்துள்ளனர். பாதுகாப்பு இருந்ததால் அடுத்த நாளே நாட்டில் நிலைமை மாறியது. நாடாளுமன்றம் பாதுகாக்கப்படாவிட்டால் இன்று நாட்டில் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

இது வடக்கில் நடந்த பெரிய போர்கள் போல் இல்லை. ஜனநாயகத்தைப் பாதுகாக்க நீங்கள் எடுத்த நடவடிக்கை. பயங்கரவாதத்தை அழித்தது போல் ஜனநாயகத்தையும் பாதுகாத்தீர்கள். இந்த நாடாளுமன்றக் கட்டடத்தைப் பாதுகாத்து நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அனுமதித்ததன் மூலம் அரசமைப்பு கடமை நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் மூலம் நாடும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இப்போது அதை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தை முன்னோக்கிக் கொண்டு சென்று மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். உங்கள் பணி இப்போது முழுமையடைந்துள்ளது. நாடாளுமன்றத்தில் உள்ள அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சி னைக்குத் தீர்வு காண வேண்டும்.

புதிய அரசமைப்பு திருத்தங்களைக் கொண்டு வர முயற்சிக்கிறோம். புதிய நாடாளுமன்ற சீர்திருத்த முன்மொழிவுகளைக் கொண்டு வந்து அனைத்துக் கட்சி ஆட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இது விவாதிக்கப்படுகின்றது, இப்போது உங்கள் கடமையைச் செய்யுங்கள்.

இப்போது நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும். பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் இதனைத் தயவு செய்து நாடாளுமன்றத்திற்கு நினைவூட்டுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்த அர்ப்பணிப்பிலிருந்து நாம் பயனடைய விரும்பினால், நாட்டின் நலனுக்காக நாம் அனைவரும் மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். நாம் இந்த நடவடிக்கையை எடுத்ததால், இப்போது நாட்டின் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். வாழ்க்கைச் செலவு அதிகரித்து, பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டதால், இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அடுத்த ஆண்டுக்குள் நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டுமானால், அது நாடாளுமன்றத்தில் செய்யப்பட வேண்டும். அதைப் பாதுகாக்க உழைத்திருக்கிறீர்கள். நாடாளுமன்றம் செயற்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நீங்கள் அனைவரும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள். அதைப் பற்றியும் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகின்றேன். ஏனெனில் இது நம் நாட்டில் ஒரு முக்கிய அலகாகக் கருதப்படுகின்றது.

1992 மற்றும் 1993 ஆம் ஆண்டுகளில் இந்தப் படையை உருவாக்க வேண்டும் என்று விவாதித்தோம். அந்த நேரத்தில், நான் ஒக்டோபர் மாதம் லண்டன் சென்றேன். நான் லண்டனில் ஜெனரல் மைக்கேல் ரோஸைச் சந்தித்தேன். அவரை எனக்கு அறிமுகப்படுத்தியது ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ. ஜெனரல் ரணதுங்க மற்றும் ஜெனரல் அடிகல ஆகியோர் அவருடன் இருந்தனர். அப்படி ஒரு பிரிவைத் தொடங்க வேண்டும் என்றார். அப்போதைய இராணுவத் தளபதி வைத்தியரத்னவிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டது, பின்னர் ஜெனரல் ஜெரி சில்வா படையை ஆரம்பித்து இந்தப் பணியை சிறப்பாகத் தொடர்ந்தார். குறிப்பாக அப்போது தொடங்கியதைத் தொடர்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம் – என்றார்.

இராணுவத் தலைமையக வளாகத்தை வந்தடைந்த ஜனாதிபதியை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே வரவேற்றமையுடன், பின்னர் ஜனாதிபதிக்கு விசேட இராணுவ மரியாதையும் வழங்கப்பட்டது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் உன்னத இடமான நாடாளுமன்ற வளாகத்துக்குள் வன்முறையாளர்கள் பிரவேசிப்பதை வெற்றிகரமாகத் தடுத்த பாதுகாப்புப் படையினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு செயலாளர் நாயகம் கமல் குணரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

---

## வவுனியா, மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிரதேச சபைகளாக உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மொனராகலை என்பனவு நகர சபைகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன.

---

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
5 பேர் 60 வயதுக்கு மேற்பட்ட 3 ஆண்கள் எனவும், ஏனைய இருவரும் பெண்கள் எனவும் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்தக் காட்டு யானை, கலாவெவ தேசிய பூங்காவில் இருந்து கிராமத்துக்கு வந்துள்ளது எனக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மாற வேண்டும் ரணில் அரசு

சட்டத்தையும், ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தல் என்ற பெயரில் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு எடுத்து வரும் நடவழக்கைககள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கடும் கண்டனங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளாக்கியிருக்கின்றன.

நாடு இப்போது எதிர்கொள்ளும் மோசமான நெருக்கடிகள், இக்கட்டுகளில் இருந்து மீள இந்த அணுகுமுறை வெற்றியளிக்கப் போவதில்லை என்பதே அத்தரப்புகளின் ஒரே கருத்தாக உள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு சர்வதேச அமைப்புகளும் ரணில் அரசின் நடவழக்கைப் போக்கைப் பகிரங்கமாகக் குறை கூறி வருகின்றன. அதிகாரத்துக்கு வந்து மூன்று வாரங்களுக்கு உள்ளேயே ரணிலின் தலைமை எதேச்சாதிகாரப் போக்கில் நகருகின்றது என்ற குற்றச்சாட்டுத் தீவிரமடையத் தொடங்கி விட்டது.

அரச எதிர்ப்பு நடவழக்கை என்ற பெயரில் கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சியதிகாரத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட மக்கள் கிளர்ச்சியை ஒட்டிய விடயங்களை, இப்போது இரும்புக்கரம் கொண்டு கையாளாவிட்டால், அதே நெருக்குவாரம் – அழுத்தம் – கிளர்ச்சி – தனது அரசுக்கு எதிராகவும் வெழக்கும் என்று ரணில் தரப்புக் கருதக் கூடும். அப்பழக் கருதுவதிலும் நியாயம் உண்டு.

ரணிலின் அரசு பதவியேற்றபோதும் அத்தகைய நிலைமையே நிலவியது என்பதும் மறுக்க முழயாது.

பொருளாதார நெருக்கழயிலிருந்து நாட்டை மீட்பதாயின் நாட்டில் ஸ்திரமான அரசு அத்தியாவசியமானது என்பது யாவரும் புரிந்து கொள்ளக் கூழய நியாயமே.

ஆகவே, தனது அரசு ஸ்திரமாக இருந்தால் மட்டுமே பொருளாதார நெருக்கழயைத் தீர்ப்பதற்கான சிக்கலுக்குரிய முழவுகளை எடுத்து முன்னேற முழயும் என்ற கள யதார்த்தத்தைப் புரிந்தே காய் நகர்த்துகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அரசியல் ரீதியாக – நாடாளுமன்றக் கட்டமைப்பு ரீதியாக – தாம் வலுவான, ஸ்திரமான அரசைக் கொண்டிருக்கின்றார், அதன் மூலம் சிக்கலான அரசியல் தீர்மானங்களையும் தேவைப்பட்ட சமயத்தில் எடுத்து, நாட்டை நெருக்கழயிலிருந்து மீட்க முழயும் என்று தன்னம்பிக்கை கொண்டிருக்கும் அவர், ஆனால் கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக நாட்டில் கட்டவிழ்ந்த அரசியல் எழுச்சிப் போராட்டங்கள் என்ற பழக்கதோசத்தில், நாடாளுமன்றுக்கு வெளியில் தனது அரசின் ஸ்திரத்தன்மை கேள்விக்குள்ளாகலாம் என்று அஞ்சுகின்றார் எனத் தெரிகின்றது.

அந்த அச்சத்தின் வெளிப்பாடே இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்களுக்குத் தாராளமாக இடமளித்து நிற்கின்றது.

இன்றைய நிலையில் இருந்து நாடு மீண்டெழுவதற்கு சர்வதேச உதவிகள், நன்கொடைகள், கடன்கள், ஒத்துழைப்புகள் மிக மிக அவசியமானவை.

உலக நாடுகளிடமிருந்தும், சர்வதேச தரப்புகளிடமிருந்து அவற்றைப் பெறுவதற்கு ஸ்திரமான அரசு முக்கியமானது என்றாலும், அந்த அரசு நியாயமானது – மனித உரிமைகளை மதிப்பது – சட்டத்தின் ஆட்சிக்கு முழுமையாக இடமளிப்பது – ஜனநாயக பூர்வமானது – என்ற தரச்சான்றிதழ்கள் இருப்பதும் கூடக் கட்டாயமானது.

அதைப் புரிந்து கொண்டால் ரணிலின் அரசு தன்னை உடனழயாகத் திருத்திக் கொள்ளும். திருத்திக் கொள்ளுமா? காலம்தான் பதில் கூறும்.

# கச்சதீவு தமிழகத்திடம் இருந்திருந்தால் கடற்றொழிலாளர் பிரச்சினை தீர்க்கப்படும்

## திராவிட முன்னேற்ற கழக தொழிற்சங்க தலைவர் நம்பிக்கை

'கச்சதீவு தமிழகத்தில் இருந்திருந்தால் கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தீர்க்கப்படும் என நம்புகிறோம்' என திராவிட முன்னேற்ற கழக தொழிற்சங்க தலைவரும் சட்டத்தரணியுமான கரூர் எம்.கண்ணதாசன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

எங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தொடராமல் செய்வதற்கான நடவடிக்கையை தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

அதற்காக தனியான ஓர் அமைச்சரை தமிழக அரசாங்கம் நியமித்திருக்கின்றது.

எனவே நீண்டநாள்களாகத் தொடரும் இரு நாட்டு கடற்றொழிலாளர்கள் பிரச்சினையில் இரண்டு நாடுகளும் சேர்ந்து விரைவில் முடிவு எடுப்பார்கள் என நம்புகிறேன்.

வரலாற்று ரீதியாக நாங்கள் பார்ப்போமானால் கச்சதீவு எங்கிருக்கின்றது என்பதை இங்கு உள்ளவர்களுக்கும் தெரியும் அங்கு உள்ளவர்களுக்கும் தெரியும்.

கச்சதீவு தமிழகத்தில் இருந்திருந்தால் கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தீர்க்கப்படும் என நம்புகிறோம். அதனால் சட்டமன்றத்தில் கச்சதீவை மீட்க வேண்டுமென தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கச்சதீவை மீட்போம் எனக் கூறியிருக்கின்றோம்.

அதனை மீட்டெடுப்பதன் மூலம் கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தீரும் என்ற அடிப்படையில் மீண்டும் கச்சதீவை எங்களுக்கு தர வேண்டும் என கேட்டு இருக்கின்றோம்.

புளொட்டின் தேசிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைப்பையேற்று நான் இந்தியாவின் தமிழகத்தில் இருந்து இங்கு வருகைதந்தேன்.

தமிழகத்தில் இருந்து பல்வேறு உதவிகளைத் தமிழக முதல்வர் ஸ்டாலின் இலங்கைத் தமிழர்களுக்கு செய்திருக்கின்றார்கள். அதற்கு நன்றி தெரிவிக்கின்ற வகையில் புளொட் மாநாட்டிலே தீர்மானத்தைக் கொண்டு வருகின்றோம். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு அந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முதல்வரிடம் கொடுக்க வேண்டும் என என்னிடத்தில் தெரிவித்தார்கள்.

அதனடிப்படையில் நான் புளொட் மாநாட்டில் கலந்து கொண்டு இருந்தேன். – என்றார்.

# பொதுமன்னிப்பின்கீழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுதல் வேண்டுமாம்!

## ஞானாசாரரின் செயலணி பரிந்துரை

புனர்வாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்புச் செயற்பாட்டின் பின்னர் ஈழப் போரில் ஈடுபட்ட அனைத்து தரப்பினரையும் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும் என கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான ஒரு நாடு – ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணி பரிந்துரை செய்துள்ளது.

அவர்களின் அறிக்கை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டதுடன், 43 பரிந்துரைகள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான கைதிகள் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் பாதுகாப்பு தரப்பின் கண்காணிப்பு நடவடிக்கையுடன் விடுதலை செய்யப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் அரசியல் கைதிகள் மீது நீதிமன்றில் பாரிய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருந்தாலும் அதனைக் கருத்திற் கொள்ளாது அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டின் அனைத்துப் பிரஜைகளையும் ஒரே பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கில் நாட்டில் விசேட சட்டங்களாக நடைமுறையில் இருக்கும் கண்டி சட்டம், முஸ்லிம் சட்டம் மற்றும் தேசவழமை சட்டம் என்பனவற்றை இல்லாதொழிப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்காக அந்த சட்டங்களை நீக்குவது மற்றும் சீர்திருத்துவது ஆகிய நடவடிக்கைகளுக்கான சரத்துக்களையும் அந்த செயலணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. கூடுதலாக, இந்த முன்மொழிவுகளில் ஓரினச்சேர்க்கையின் குற்றமாக்குதலை நீக்குவதும் அடங்கும்.

சாதி என்ற காரணியை ஊக்குவிக்க பொது ஊடகங்களுக்கு இடம் கொடுக்காத வகையில், ஊடகங்களுக்கான புதிய நெறிமுறைகள் உள்ளிட்ட விதிகள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் தேவைகள் போன்ற சூழ்நிலைகளைத் தவிர, அடையாளத்தை அடையாளம் காண முடியாத வகையில் முகத்தை முழுமையாக மறைக்கும் ஆடைகளை அணிவது சட்டத்தால் தடை செய்யப்பட வேண்டும் என்று பணிக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஹலால் சான்றளிக்கப்பட்ட பொருள்கள் மற்றும் ஹலால் சான்றளிக்கப்படாத பொருள்களை கடைகளில் தனித்தனியாக வைத்திருப்பது மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது உட்பட ஹலால் சான்றிதழ் செயல்முறையை வாடிக்கையாளர்களுக்கு வாங்குவதற்கான வாய்ப்பை வழங்குவது மற்றொரு பரிந்துரையாகும்.

மேலும், வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்புத் துறைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது, ஆதிவாசி சமூகத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட ஒதுக்கீட்டு முறையின் மூலம் வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும், ஒரே நாடு – ஒரே சட்டம் என்ற மக்கள் பணிக்குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.

---

### தேநீர், உணவுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைந்தமை ஆகிய காரணங்களினாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதங்களாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையால் தேநீர் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்திருந்த நிலையிலேயே தற்போது அவற்றின் விலைகளைக் குறைக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அசேல சம்பத் மேலும் கூறியுள்ளார்.

---

### சிறைகளை இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச அடக்குமுறையை நிறுத்துமாறும் அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறும் கோரி ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்ற வளாகத்துக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசால் முன்னெடுக்கப்படும் இந்த அடக்குமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அரசின் இந்த அடக்குமுறையையும் அரச மிலேச்சத்தனத்தையும் ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மர்மமான முறையில் இளைஞர்கள் காணாமல்போவதன் பின்னணியில் உள்ள இயக்கியார் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அரசால் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்து நாட்டை சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் – என்றார்.

---

### ரணில் அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எவ்வாறாயினும், கடந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிரான போராட்டங்களுடன் ஒப்பிடுகையில் நேற்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் ரணில் அரசுக்கு எதிராக நடை பெற்ற போராட்டங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவின் மறைமுக ஏற்பாட்டில் நேற்றைய போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் கடும் எதிர்ப்பினாலேயே சீனக் கப்பலின் வருகை தடைப்பட்டது



இந்தியாவின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து, தென்னிலங்கையில் உள்ள அம்பாந்தோட்டை துறை முகத்திற்கு சீன 'உளவுக் கப்பலின்' உத்தேசப் பயணத்தை இலங்கை தடுத்துள்ளது. உத்தியோகபூர்வ தகவல் ஒன்றில், 'மேலும் ஆலோச னைகள் வரை' கப்பலின் வரு கையை ஒத்திவைக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு கொழும் பில் உள்ள சீனத் தூதரகத்தைக் கோரியுள்ளது.

இதற்கு முன்னர் கொழும்பில் உள்ள இலங்கை அதிகாரிகளிடம் இந்தியா இந்த பிரச்சினையை எழுப்பி இக்கப்பலின் விஜயத்தின் நோக்கத்தை அறிய முயன்றது.

'யுவான்வாங்5'என்றஆராய்ச்சிக் கப்பல் சீனர்களால் கட்டப்பட்ட துறைமுகமான ஹம்பாந்தோட்டைக்கு ஓகஸ்ட் 11 ஆம் திகதி வந்து 'இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் வடமேற்குப் பகுதியில் விண்வெளி கண்காணிப்பு, செயற்கைக்கோள் கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்பு' நடத்த திட்டமிடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டது. கப்பலின் சாத்திய மான நடவடிக்கைகள் குறித்து அங்கு கவலைகளும் தெரிவிக்கப்பட்டன.

"இந்தியக் கடற்படைக்கு எதிரான சாத்தியமான நீர்மூழ்கி எதிர்ப்பு நடவடிக்கை களுக்காக கடல் தளத்தை வரைபடமாக்குவதில் கண்காணிப்பு கப்பல் ஈடுபட்டுள்ளது என்பதை அறிந்திருந்தும், சீன இராணுவக் கப்பலை வர்த்தக துறைமுகத்தில் நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டதன் மூலம் இலங்கை முதலில் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களைப் புறக்கணித்தது. இலங்கையின் நடவடிக்கைக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்த பின்னரே, கப்பல் வரும் திகதியை ஒத்திவைக்குமாறு கொழும்பு சீனாவை வலியுறுத்தியது" – என்று மூலோபாய விவகார நிபுணர் பிரம்மா செல்லனே கூறினார்.

2014ஆம் ஆண்டு இரண்டு சீன நீர்மூழ்கிக் கப்பல்கள், கொழும்பு துறைமுகத்தில், சீனாவால் கட்டப்பட்ட புதிய கொள்கலன் முனையத்தில், தனித்தனியாக நிறுத்தப் பட்டன. அதன் பின்னர் இப்போது சீன இராணுவக் கப்பலை அம்பாந்தோட்டையில் நிறுத்த அனுமதித்தால், அது, இலங்கையின் இந்திய நட்புறவற்ற செயல்களை அடுத்து மேலும் அதிகப்படுத்தியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த விவகாரத்தை ஒட்டி இந்தியா இலங்கையுடன் பிரச்சினையைக் கிளப்பியுள்ளதாக ஓகஸ்ட் 2ஆம் திகதி 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தி வெளி யிட்டிருந்தது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பதற்கு சில நாள்களுக்கு முன்னர், அம்பாந் தோட்டையில்கப்பல்நிறுத்தப்படுவதற்கு வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களின் கூட்டு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சர்ச்சை கிளம்பியமையை அடுத்து, இந்த விடயம் வழக்கமான மற் றும் சட்டபூர்வமான கடல்சார் நடவ டிக்கை, இதில் தலையிட வேண்டாம் என்று அனைத்து 'சம்பந்தப்பட்ட தரப் பினரையும்' கேட்டுக்கொள்வதாக சீனா அறிவித்தது.

தீவு நாடான இலங்கை பெய்ஜிங் கின் பொருளாதாரத் தழுவலுக்குள் வீழ்ந்தமைக்குப் பொறுப்பாகக் கருதப்பட்டவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவரின் கீழ், இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி, சீன நீர்மூழ்கிக் கப்பல் சாங்செங் 2 இரண்டு முறை (2014 இல்) கொழும்பு துறைமுகத்தில் நிறுத்த அனுமதிக்கப்பட் டது.

1987ஆம் ஆண்டு செய்யப்பட்ட இலங்கை – இந்திய இருதரப்பு ஒப்பந்தம், இந்தி யாவின் நலன்களுக்குப் பாதகமான வகையில், இலங்கை எந்த ஒரு துறைமுகத் தையும் வெளிநாட்டு இராணுவப் பயன்பாட்டிற்கு வழங்கலாகாது என்று தெளிவாக கூறுகிறது. இரு நாடுகளும் அந்தந்தப் பகுதிகளைப் பாதுகாப்பைக் குழிதோண்டிப் புதைக்கும் பரஸ்பர நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என் றும் இந்த ஒப்பந்தம் கேட்டுக்கொள்கிறது.

போதுமான போக்குவரத்தை உருவாக்கத் தவறிய அம்பாந்தோட்டை துறைமுகம் மோசமான வளர்ச்சி விகிதத்திற்கு வழிவகுத்தது. நீண்ட காலமாக இலங்கையின் பொறுப்பற்ற செலவினங்களுக்கு ஓர் உதாரணமாக இது(இந்தத் துறைமுக முத லீடு) கருதப்படுகிறது. இத்தகைய செயற்பாடுகளே நாடு இப்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பெற்றுள்ள சீனா போதுமான வணிக போக்கு வரத்து இல்லாததால், அதை ஒரு கடற்படை வசதியாகப் பயன்படுத்த முயலலாம் என அஞ்சப்படுகிறது.

**(மூலம்: 'ரைம்ஸ் ஒவ் இந்தியா')**

# இந்தியாவின் தேஜாஸ் போர் விமானங்களுக்கு உலகளாவிய ரீதியில் மதிப்பு, மவுசு, அங்கீகாரம்

அமெரிக்கா, ஆர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, எகிப்து, இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளும் இலகுரக போர் விமானங்களை (எல்.சி.ஏ.) வாங்க ஆர்வம் காட்டியுள்ள நிலையில், மலேசியா (இந்தியாவின் உள்நாட்டுத் தயாரிப்பான) 18 தேஜாஸ் போர் விமானங்களை வாங்குவதாக வெள் ளிக்கிழமை மக்களவையில் இந்திய அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

2023ஆம் ஆண்டுக்குள் 83 தேஜாஸ் ஜெட் விமா னங்களைத் தயாரிப்பதற்காக, இந்திய அரசு கடந்த ஆண்டு, அரசுக்குச் சொந்தமான ஹிந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு 48 ஆயிரம் கோடி ரூபா(இந்தியப் பணத்தில்) ஒப்பந்தத்தை வழங்கியது.



இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட தேஜாஸ் போர் விமானம் மலேசியாவின் முதல் தேர்வாகியமை சமீபத் தில் செய்திகளில் இடம்பெற்றது. இந்த இந்திய விமா னம் சீனா, ரஷ்யா மற்றும் தென் கொரியாவின் வளர்ந்த விமானங்களுடன் போட்டியிட்டது அத்தோடு மேலும்



அதன் மேலான அம்சங்களால், அது அனைத்து விமா னங்களையும் மேவியுள்ளது.

சுகோயுடன்(சுகோய் ரக விமானங்களுடன்) ஒப்பிடும் போது, தேஜாஸ் மிகவும் இலகு ரகமானது என்று பாதுகாப்பு நிபுணர் கமர் ஆகா கூறினார்.

தேஜாஸ் எட்டு முதல் ஒன்பது தொன் எடையை சுமந்து செல்லும் திறன் கொண்டது. சுகோய் அளவுக்கு அதிகமான ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளுடன் பறக்க முடியும், அதிக எடை கொண்டது. இதன் மிகப்பெரிய நன்மை அதன் வேகம். லேசானதாக இருந்தாலும், அதன் வேகம் ஈடு இணையற்றது. இந்த விமானங்கள் ஒலியின் வேகத்தைப் போல் வேகமாக, அதாவது மாக் 1.6 முதல் 1.8 வரை, 52,000 அடி உயரத்தில் பறக்கும் என்று அவர் கூறினார்.

கமர் ஆகா மேலும் கூறியவை வருமாறு:–

தேஜாஸ் மார்க் – 1ஏ, சுகோய் – 30எம்.கே.ஐ. போர் விமானத்தை விட விலை அதிகம். ஏனெனில் அதில் பல சமீபத்திய உபகரணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, இது இஸ்ரேலில் ரேடார் உருவாக்கப் பட்டுள்ளது. இதுதவிர, இந்தவிமானம்உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ரேடர்களையும் மேலதிகமாகக் கொண்டிருக்கின்றது. இது மிகவும் இலகு ரகமானது. மற்றும் அதன் போர் சக்தியும் சிறப்பாக உள்ளது. இது ஒரு பல் ரக செயற்பாட்டுப் போர் விமானம்.

முக்கியமான செயல்பாட்டுத் திறனுக்காக தேஜாஸ் செயலில் மின்னணு முறையில் ஸ்கேன் செய்யப்பட்ட ரேடார் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த விமானம் வானில் பறக்கும் போதே எரி பொருளை நிரப்பிக் கொண்டு மீண்டும் போருக்குத் தயாராகலாம். தொலைவில் இருந்து எதிரி விமா னங்களை குறிவைக்க முடியும். அதுமட்டுமன்றி எதி ரிகளின் ரேடாரையும் தாக்கும் திறன் கொண்டது.

இந்திய விமானப்படையில் போர் விமானங்கள் பற்றாக்குறையாக இருக்கும் நேரத்தில், தேஜாஸ் வரவேற்கப்பட வேண்டும், என்று பாதுகாப்பு நிபுணர் கூறினார்.

தேஜாஸ் தனது முதல் விமானத்தை ஜனவரி 2001 இல் தயாரித்தது. இந்த விமானம் 2016 இல் இந்திய விமானப்படையின் படைப்பிரிவில் இணைக்கப்பட் டது.

**(மூலம்: 'த எக்கனமிக் ரைம்ஸ்')**



# அவசரகால நடவடிக்கைகளை நிறுத்தி உரையாடல்களை மேற்கொள்ளுங்கள்!

## அரசாங்கத்தை கோரும் ஐக்கிய நாடுகள்

இலங்கை அரசாங்கம் மீண்டும் அவசரகால நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறும், அதற்குப் பதிலாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை குறைப்பதற்கு அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பாக இலங்கையர்களுடன் திறந்த மற்றும் உண்மையான உரையாடலை நாடுமாறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை நிபுணர்கள் கோரியுள்ளனர்.

கடந்த 2022 ஏப்ரல் 2 முதல் இலங்கை அதிகாரிகள் அமைதியான போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக குரல் எழுப்புவதற்கும் எதிராக அவசர காலச் சட்டத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்கள் கண்டித்துள்ளனர்.

மேலும், மார்ச் 2022 முதல் இலங்கை எதிர்கொள்ளும் பாரதூரமான பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதில் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்துவதற்காக ஆயிரக்கணக்கானோர் கொழும்பிலும் நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஆழமடைந்துவரும் பொருளாதார நெருக்கடி ஊழல் குற்றச்சாட்டுகள் அதிகரித்து வரும் பணவீக்கம் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை மற்றும் நீடித்த மின்வெட்டு மற்றும் சட்டவிரோத நிதிப் பாய்ச்சலைச் சரியாக நிர்வகிக்கத் தவறியதன் எதிரொலியாக வெகுஜனப் போராட்டங்கள் வேகத்தைப் பெற்றுள்ளன.

இதன்போது, பாதுகாப்புப் படையினர் அவசரகால நடவடிக்கைகளால் தங்களுக்கு வழங்கப்பட்ட விரிவான அதிகாரங்களைப் பயன்படுத்தி கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைகளை பயன்படுத்தி எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்கியுள்ளனர்.

கடந்த 2022 ஜூலை 22 அன்று தலைநகர் கொழும்பில் காலிமுகத்திடலில் உள்ள போராட்டக்காரர்களின் முகாமில் பொலிஸ் மற்றும் இராணுவத்தின் கூட்டு நடவடிக்கையின்போது 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து கடந்த வாரங்களில் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள், எதிர்ப்பாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை கண்டித்துள்ள ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள், தேசிய பாதுகாப்பை ஒரு சாக்குப்போக்காக கொண்டு கருத்து வேறுபாடுகளின் வெளிப்பாடுகளை மூடிவிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

மனித உரிமைப் பாதுகாவலர்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் அமைதியான போராட்டங்களின் பின்னணியில் பாதுகாக்கப்பட வேண்டும். போராட்டங்களில் பங்கேற்பதற்காக குற்றவியல் பொறுப்பை அவர்கள் எதிர்கொள்ளக் கூடாது என்றும் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தலைநகர் கொழும்பிலும் நாடு முழுவதிலும் பல மாதங்களாக நடைபெற்ற வெகுஜனப் போராட்டங்களைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜூலை 15 அன்று பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

அவருக்குப் பின் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 ஜூலை 17 அன்று மற்றுமொரு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இலங்கை நாடாளுமன்றம் 2022 ஜூலை 27ஆம் திகதியன்று தற்போதைய அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்துள்ளது. இதன் மூலம், ஊரடங்கு உத்தரவை விதித்து பாதுகாப்புப் படைகளுக்கும் இராணுவத்துக்கும் பரந்த மற்றும் விருப்பமான அதிகாரங்களை வழங்கும் கட்டளைச் சட்டத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்தகைய அதிகாரங்கள் நீதிமன்ற மேற்பார்வையின்றி போராட்டக்காரர்களைத் தடுத்து வைப்பதற்கும் தனியார் சொத்துக்களை சோதனை செய்வதற்கும் படையினரை அனுமதித்துள்ளன.

அவசர நடவடிக்கைகளை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பாகப் பலமுறை அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதில் பலனில்லை.

இந்த நிலையில், அமைதியான ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமைகளை சட்டப்பூர்வமாகப் பயன்படுத்துவதை மீறும் வகையில் இதுபோன்ற நடவடிக்கைகளை கண்டிப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அடக்குமுறை நடவடிக்கைகள் உரையாடலுக்கான வழிகளை மேலும் மூடுகின்றன மற்றும் பதற்றங்கள் அதிகரிக்கும் அரசியல் சூழலை ஏற்படுத்துகின்றன என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டினால் போக்குவரத்துச் சபையின் பணிப்புறக்கணிப்பு முடிவுக்கு!

கிளிநொச்சி மாவட்ட வட பிராந்திய போக்குவரத்து சபை ஊழியர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டையடுத்து முடிவுக்கு வந்தது.

பரந்தன்-முல்லைத்தீவு சாலை போக்குவரத்தில் ஈடுபட்ட சாரதி, நடத்துநர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போக்குவரத்து சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

முரசுமோட்டைப் பகுதியில் பஸ்ஸில் ஏறிய பெண்ணொருவர் தவறி விழுந்து காயப்பட்ட சம்பவம் தொடர்பில், புளியம்பொக்கணை பகுதியில் பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் ஒரு குழுவினரால் தாக்கப்பட்டுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாகவே சாரதி, நடத்துநரைத் தாக்கியவர்களில் மூவரை தர்மபுரம் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த செல்வராஜா ரேனுஜா என்ற மாணவியும், தாக்கப்பட்ட சாரதி மற்றும் நடத்துநரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்துடன் தொடர்புடைய பஸ் கிளிநொச்சி பொலிஸாரால் எடுத்துச்செல்லப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில், அமைச்சரின் இணைப்பாளர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோருடன் ஆலோசித்த மேலதிக இணைப்பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன், நேரில் சென்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட ஊழியர்களைச் சந்தித்தார்.





அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக, கிளிநொச்சி வ.பி.போ.ச. தொழிற்சங்க பிரதிநிதிகளான மணிமாறன், தர்ஷன் ஆகியோருடனும், கிளிநொச்சி சாலை முகாமையாளர் கிருஷ்ணகுமார் மற்றும் வட பிராந்திய போக்குவரத்து கட்டுப்பாட்டு முகாமையாளர் லம்பேர்ட் ஆகியோருடனும் கலந்துரையாடல் நடத்தி, பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

அதன்பின்னர், சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள மாணவி ரேணுஜா செல்வராஜா மற்றும் தாக்குதலுக்குள்ளான சாரதி, நடத்துநர் ஆகியோரை வைத்தியசாலையில் சென்று நலம் விசாரித்த அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சிகிச்சைகள் தொடர்பாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சுகந்தனிடம் கேட்டறிந்தார்.

இதன்பின்னர், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பிரதம தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரி சரத் சமரவிக்கிரமவைச் சந்தித்து பொலிஸ் விசாரணைகளின் முன்னேற்ற நிலை தொடர்பாக அவரிடம் விரிவாகக் கேட்டறிந்துகொண்டார்.

சாரதி, மற்றும் நடத்துநரைத் தாக்கினர் என சந்தேகிக்கப்படும் 3 பேர் இதுவரையில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும், ஏனையோரைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்த பொலிஸ் பொறுப்பதிகாரி, மாணவி காயமடைந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக சம்பவத்துடன் தொடர்புபட்ட பஸ் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டிருப்பதாகவும், சாரதி, நடத்துநரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, நிலைமைகளின் முன்னேற்றம் தொடர்பாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட சாலை ஊழியர்களுக்கு விளக்கிய அமைச்சரின் மேலதிக இணைப்பாளர், பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், பொதுமக்களுக்குத் தொடர்ந்து அசௌகரியம் ஏற்படாத வகையில் முடிவெடுக்குமாறு கேட்டுக்கொண்டதையடுத்து, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் பணிப்புறக்கணிப்பைக் கைவிடுகிறோம் என அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, உடனடியாகவே மீண்டும் தமது சேவைகளை ஆரம்பித்த கிளிநொச்சி வ.பி.போ.சபையினர், இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றி தெரிவித்தனர்.

# கோட்டா கோகம ஆர்ப்பாட்டக்காரர்களை தேடி கைது செய்யும் அரசு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் மௌனம் காப்பது ஏன்?

## அந்தச் சங்கத்தின் மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயச்சந்திரா கேள்வி



(மன்னார் நிருபர்)

'கோட்டா கோ கம' ஆர்ப்பாட்டக்காரர்களை தேடித் தேடி கைது செய்யும் அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் மௌனம் காப்பது ஏன்? என காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளை தேடும் சங்கத்தின் மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயச்சந்திரா கேள்வி எழுப்பியுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்து எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் 2 ஆயிரம் நாள்கள் நிறைவடைகின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களை சந்தித்த போது மனுவேல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கும் போது –

எதிர்வரும் 12 ஆம் திகதி (12-08-2022) வெள்ளிக்கிழமையுடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டத்தில் குதித்து 2 ஆயிரம் நாள்கள் நிறைவடைகின்றன.

இதனை முன்னிட்டு நாங்கள் இந்த 2 ஆயிரம் நாள்கள் வீதிகளில் நின்று போராடி இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று கூறி சர்வதேச சமூகத்திடம் நீதி கோரி இருந்தோம்.

ஆனால் இதுவரைக்கும் சர்வதேசமும் எங்களுக்கு எந்த ஒரு முடிவுகளும் சொல்லவில்லை.

வருகின்ற ஜெனிவா கூட்டத்தொடரில் என்றாலும் இலங்கை போர்க் குற்றம் இனப்படுகொலை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று எங்களுக்கு ஒரு முடிவு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்த 2 ஆயிரம் நாள்கள் நிறைவு போராட்டம் கிளிநொச்சி மாவட்ட கந்தசாமி கோவிலில் காலை 9 மணிக்கு ஆரம்பித்து டிப்போ வரையும் செல்ல உள்ள இந்தப் போராட்டத்தில், இன,மத,பேதம் பாராமல் இளைஞர்கள், யுவதிகள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் இனத்தைச் சார்ந்த அனைவரும் எமக்கு உறுதுணையாக நின்று எமது கோரிக்கையை வெற்றி பெறச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

2 ஆயிரம் நாள்கள் என்று சொன்னால் சாதாரணமாகக் கிடையாது. ஆறு வருடங்கள் நிறைவடைந்துள்ளன. அதில் 139 காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர்கள் உயிரிழந்துள்ளார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு உறவுகளும் மரணித்துக் கொண்டு போகும் போது எங்களிடம் உள்ள சாட்சிகளும் அவர்களோடு சேர்ந்து மரணித்துப் போகின்றன.

அதேபோல் நாங்களும் மரணித்து போனால் எங்களுடைய சாட்சிகளும் இல்லாமல் போய் விடும். அதைத்தான் இந்த இலங்கை அரசாங்கம் விரும்புகிறது.

அதனால்தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதி கோரி வருகிறோம். சர்வதேசம் எங்களுடைய கண்ணீரையும் அவல நிலையையும் பார்த்து எமக்கான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று நம்பிக்கையோடு இந்த ஊடக சந்திப்பு செய்கிறோம்.

மேலும் அனைவரும் 12 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கந்தசாமி கோவிலடியில் ஒன்று கூடுமாறு உங்களை தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம்.

மேலும் இந்த காலி முகத்திடலில் உள்ள கோட்டா கோ கம போராட்டக் களத்தில் போராடிய இளைஞர்கள், யுவதிகளை ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட அங்கு அயன் பாக்ஸ் எடுத்தவர்களையும் ,அந்த நீச்சல் குளத்தில் குளிப்பவர்களையும், தொலைபேசிகள் பேசியவர்களையும், ஜனாதிபதி செயலகத்தில் உணவு உண்டவர்களையும் தேடித் தேடி கைது செய்யும் இந்த அரசாங்கமும் பொலிஸாரும் ஏன் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை?

13 வருடங்களாக பொலிஸ் நிலையங்களுக்கு ஏறி இறங்கி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அறிவித்திருந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

அரசாங்கத்தின் கைக்கூலியாகவே இந்த பொலிஸாரும் நீதியை மறந்து செயற்படுகின்றார்கள்.

உண்மையில் கைது செய்யப்பட்டு பாதாள சிறையில் அடைத்து வைத்திருந்தவர்களை உண்மைகள் வெளிவரப் போகின்றன என்று தற்போது கொலை செய்து போடுகின்றார்களோ தெரியவில்லை.

இலங்கை இராணுவமும், இலங்கை பொலிஸாரும் தற்போதைய ஆர்ப்பாட்டக்காரர்களைத் தேடித் தேடிப் பிடிப்பதை போன்று அவர்கள் நினைத்திருந்தால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளையும் தேடிக் கண்டு பிடித்துத் தந்திருக்கலாம் அவர்கள் நினைக்கவில்லை.

எனவே தான் நாங்கள் சர்வதேசத்திடம் மீண்டும் மீண்டும் நீதியை கேட்டு நிற்கின்றோம் என காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளை தேடும் சங்கத்தின் மன்னார் மாவட்ட தலைவி தெரிவித்தார்.

# கடற்றொழிலாளர்களின் எரிபொருள்கள் பிரச்சினைக்கு அமைச்சரவையில் தீர்வு!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினைக்கு ஆரோக்கியமான தீர்வைக் காண்பதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள வாழ்வாதார சவால்களை திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவையில் எடுத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான மண்ணெண்ணெயை நியாயமான விலையில் எப்படியாயினும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியதுடன் மண்ணெண்ணெயை இறக்குமதி செய்வதில் காணப்படும் சவால்களையும் தெளிவுபடுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர ஆகிய மூவரும் சந்தித்து கலந்துரையாடி, மேற்படி பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவொன்றை எட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பு புறக்கோட்டை சந்தையில் பொருள்களின் விலைகள் குறைப்பு!

## முரண்பாடு உள்ளதென்கிறார் ஜெயசேகரம்



(இ.கலையமுதன்)

புறக்கோட்டை சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன என அண்மையில் ஊடகங்களில் செய்தி வெளியான நிலையில் அதில் முரண்பாடுகள் காணப்படுகின்றன என யாழ் வணிகர் கழகத்தின் உப தலைவர் ஆ.ஜெயசேகரன் தெரிவித்தார்

யாழ் வணிகர் கழகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புறக்கோட்டை சந்தையில் அத்தியாவசியப் பொருள்கள் விலைகள் குறைக்கப்பட்டன என அண்மையில் ஊடகங்களில் செய்தி வெளியானது. இது தொடர்பாக விளக்கம் வழங்க வேண்டிய தேவையுள்ளது. புறக்கோட்டையில் இருந்து மொத்தமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்து யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்கின்றார்கள். அண்மையில் ஊடகங்களில் வெளிவந்த புறக்கோட்டையின் சில பொருள்களின் விலை தொடர்பாக முரண்பாடுகள் இருக்கின்றன. அதனை தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

புறக்கோட்டை வர்த்தக சங்கம் ஊடாக அத்தியாவசியப் பொருள்களின் விலை தொடர்பாக எமக்கு அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். கொழும்பு சந்தை நிலைவரப்படி பொருள்களின் விலைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டையில் சீனியின் மொத்த விலை 295 ரூபாவாக விற்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 310 ரூபாவாக விற்கப்படுகின்றது. போக்குவரத்து செலவு உட்பட இடங்களுக்கு இடம் விலைகள் வித்தியாசம் காணப்படும்.

கொழும்பு புறக்கோட்டையில் மிளகாய் 1,550 ரூபாவாக விற்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 1,600 ரூபாவாக விற்கப்படுகின்றது. பருப்பு 440 ரூபாவாக கொழும்பில் விற்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பருப்பு 500 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. பூடு 420 ரூபாவாக கொழும்பில் விற்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 480 ரூபாவுக்கு பூடு விற்கப்படுகிறது.

உருளைக்கிழங்கு 170 ரூபாவாக கொழும்பில் விற்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 200 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. வெங்காயம் 150 ரூபாவாக கொழும்பில் விற்கப்படுகின்றது. யாழில் 180 ரூபாவாக விற்கப்படுகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட மா 275 ரூபாவாக கொழும்பில் விற்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 300 ரூபாவாக விற்கப்படுகின்றது.

யாழ்ப்பாண நகரத்தில் பொதுமக்கள் கொள்முதல் செய்தால் ஏற்கனவே குறிப்பிட்ட விலைக்கு பொருள்களை வாங்க முடியும். வேறு வேறு இடங்களுக்கு செல்லும்போது போக்குவரத்து தூரத்துக்கேற்ப விலைகள் மாறுபடும். இதுவே உண்மையான நிலைவரம் – என்றார்.

# இலங்கையை சுபீட்சமான நாடாக மாற்ற ரணில் விக்கிரமசிங்கவிற்கு திறமையுள்ளது

## எகிப்து ஜனாதிபதியும் நம்பிக்கை

இலங்கையை முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்துக்கு இட்டுச் செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு உள்ள திறமையில் எகிப்து அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது என எகிப்து அரபுக் குடியரசின் ஜனாதிபதி அப்தெல் பத்தா அல் சிசி தெரிவித்துள்ளார்.

எகிப்து அரபுக் குடியரசின் ஜனாதிபதி அப்தெல் பத்தா அல் சிசி அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் .

மேலும் இரு நாடுகளின் பொதுவான நலன்களை முன்னெடுப்பதற்கும், இரு நாட்டு மக்களுக்கும் மிகவும் வளமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த ஆர்வமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சி மாவட்ட வளங்களை அபகரிக்கும் தனிநபர்களுக்கு ஆளுநர் துணைபோகக்கூடாது!

## ஜீவனுக்கு சிறிதரன் எம்.பி. காட்டமான கடிதம்

(ந. லோகதயாளன்)

போரின் காரணமாக முழுமையாக மீண்டும் கட்டமைக்கப்படாத கிளிநொச்சி மாவட்டத்தில் எண்ணிலடங்கா காணித்தேவைகளைப் புறந்தள்ளி, அரசியல் பின்புலத்தையும், பண பலத்தையும் பயன்படுத்தி இந்த மாவட்டத்தின் வளங்களை அபகரிக்க முற்படும் தனிநபர்களின் செயற்பாடுகளை தடுக்க வேண்டிய தாங்கள் அதற்கு துணைபோகக் கூடாது என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கிளிநொச்சி நகரில் காக்காகடைச் சந்திக்கு அருகிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான எரிபொருள் சேகரிப்பு களஞ்சியசாலை அமைந்திருந்த ஓர் ஏக்கர் 3 றூட் 14 பேர்ச் விஸ்தீரணமும், நில அளவை வரைபடத்தின்படி 245 ஆம் இலக்கமும் உடைய அரச காணியை (தற்போதுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துடன் இணைந்ததாக) தனியார் நிறுவனத்திற்கு வழங்க வேண்டுமென்ற முன்முனைப்புகள் தங்களால் மேற்கொள்ளப்படுகின்றன எனவும், இது தொடர்பில் அதிகாரிகளுக்கு அதிகூடிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் அறிய முடிகிறது.

இந்தக் காணியை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்குவதென்ற தீர்மானம் 2020.09.17 ஆம் திகதிய கிளிநொச்சி மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் 2022.01.13 ஆம் திகதிய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், அந்தத் தீர்மானங்களை மீறி, காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுவினதோ, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினதோ அனுமதி பெறப்படாது அதே காணியை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்க முற்படுகின்றமை இந்த மாவட்டத்தின் அரச நிர்வாக அலகுகளின் அதிகார வரம்புகளைக் கேள்விக்கு உட்படுத்துவதாக அமைந்துள்ளது.

இலங்கையின் 25 மாவட்டங்களுள், இதுவரை கட்டமைக்கப்பட்ட நகர வடிவமைப்பொன்றைக் கொண்டிராத மாவட்டமான கிளிநொச்சியில், மாவட்ட செயலகத்தை மையமாகக் கொண்டு புதிய நகர மையத்தை உருவாக்குவதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் சூழலில், அத்தகைய நகர வடிவமைப்புடன் தொடர்புபட்ட பல்வேறு பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்கான காணிகளைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையே காணப்படுகிறது. இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் என்னால் தொடர்ச்சியாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றபோதும், தாங்கள் வடக்கு மாகாண ஆளுநராக பதவியேற்றதிலிருந்து இன்றுவரை நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் எவற்றிலும் பிரசன்னமாகாதமையால் அவை தொடர்பில் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர வடிவமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் பொதுநூலகத்தை அமைப்பதற்குப் பொருத்தமான காணித்துண்டொன்று நகரமத்தியில் வழங்கப்படவில்லை. போருக்கு முற்பட்ட காலத்தில் நூலகத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 6 பரப்புக் காணியும் போருக்குப் பின்னர் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்து, 10 வருட கால போராட்டத்தின் விளைவாக 4 பரப்புக் காணி மட்டுமே தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. அந்தக் குறுகிய நிலப்பரப்புக்குள்ளேயே கிளிநொச்சி மாவட்டத்துக்கான பொது நூலகத்தை அமைப்பதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பண்பாட்டு அடையாளமாக, அதன் தோற்றத்திலும், இயங்குதிறனிலும் யாழ்ப்பாண நூலகம் எப்படி மிளிர்கிறதோ, அதே அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தின் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான பொதுநூலகம் ஒன்றை நிறுவ வேண்டுமென்பது கல்விப் புலத்தினரின் நீண்டகாலப் பேரவா ஆகும். கிட்டத்தட்ட நான்கு வருடகால பிரயத்தனங்களின் மத்தியில், கரைச்சிப் பிரதேச சபையின் நிலையான வைப்பிலுள்ள நிதியைப்பெற்று, புதிய நூலகத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளபோதும், நகரின் மத்தியில் நூலக அமைவிடத்துக்கு உகந்ததாக, போதிய இடவசதிகளுடன் கூடிய காணியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான புதிய நகரசபையை உருவாக்குவதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் அனைத்தும் முழுமைபெற்றுள்ள நிலையில், நகரசபை உருவாக்கத்துக்கான அனுமதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் நகரின் மையத்தில், நகரசபை வளாகத்தை நிறுவுவதற்குரிய காணி இதுவரை அடையாளப்படுத்தப்படவில்லை என்பதோடு, அதற்கான காணியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. தமிழர்களின் கலை, கலாசார, மொழி, பண்பாட்டு, மரபியல் அடையாளங்களை வளர்த்தெடுக்கும் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்துக்கு வெறுமனே இரண்டுபரப்புக் காணியே வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டியங்கும், கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட சங்கம், புகைப்படப் பிடிப்பாளர் சங்கம், அழக தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய மக்கள் நலன் சார் சமூகமட்ட அமைப்புக்களும், பிரம்ம குமாரிகள் இராஜயோகா நிலையம் என்னும் ஆன்மீக நிறுவனமும் தத்தம் சேவைப்பரப்பை விஸ்தரிப்பதற்கும், நிர்வாக அலுவலகங்களை அமைப்பதற்குமாக, குறைந்தது ஒரு பரப்பு வீதமேனும் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகளை நீண்டகாலமாக முன்வைத்தும் இதுவரை அந்த விடயம் சார் நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

வாழ்வாதார இயலுமைகளை உருவாக்குவதற்காக முன்னாள் போராளிகள், சுய கைத்தொழில் உற்பத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும் வழிவகையற்று வேலைவாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகள், காலமும் சூழலும் தேவையும் உணர்ந்து தத்தம் பணிகளை மக்கள் மயப்படுத்த வாய்ப்பற்றிருக்கும் சிவில் சமூக மற்றும் ஆன்மீக அறப்பணி நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்குரிய காணித்துண்டுகளை நீண்டகால குத்தகை அடிப்படையிலேனும் பெற்றுக் கொள்வதற்காக மீள்குடியேற்றம் நடைபெற்ற காலத்திலிருந்தே அந்நிறுவனங்கள் முயற்சித்து வருகின்ற போதும் அவற்றுக்குரிய காணிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே இன்றளவும் நிலவுகின்றது.

வடக்கு மாகாண சபையின் ஆளுகைக்குட்பட்ட பல திணைக்களங்களின் நிர்வாக அலகுகளை கிளிநொச்சியில் நிறுவுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகியுள்ள போதும், அந்த அரச திணைக்களங்களுக்குரிய அலுவலகங்களை அமைப்பதற்குப் பொருத்தமான காணிகள் எவையும் இனங்காணப்படவோ, ஒதுக்கீடு செய்யப்படவோ இல்லை.



மாவட்ட செயலக வளாகத்தின் ஒருபகுதி, டிப்போச் சந்திக்கு அருகில் இராணுவ நினைவுத்தூபி அமைந்துள்ள காணி (முன்னர் சந்திரன் பூங்கா அமைந்திருந்த காணி), பொது விளையாட்டு மைதான, பொது நூலகக் காணி உள்ளிட்ட நகர மத்தியிலுள்ள 40 வீதமான காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாத நிலையே இன்றளவும் தொடர்கிறது.

ஏ – 9 வீதியில், பழைய மாவட்ட செயலகத்துக்கு அருகிலுள்ள, சந்தைப்படுத்தல் திணைக்களத்துக்கு உரித்தான காணி அபகரிக்கப்பட்டு, அந்தக் காணியில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற கட்டடத் தொகுதியில் தற்போதும் சதொச விற்பனை நிலையம் இயங்கி வருகின்றபோதும் அது தொடர்பில் இதுவரை காலமும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவற்றுக்கு மேலதிகமாகவும், இந்த மாவட்டத்தின் பொதுப் பயன்பாடுகளுக்கான காணித் தேவை மிகுந்திருக்கும் நிலையில் அக்கறை கொள்ளாது, தங்களுக்கிருக்கும் காணி அதிகாரத்தைப் பயன்படுத்தி, நகர மையத்தை அண்டியுள்ள, பொதுப்பயன்பாட்டுக்கு உகந்த பெருமளவு விஸ்தீரணமுடைய ஓர் அரச காணியை எந்தவித நியாயப்பாடுகளுமற்று, பண பலமும், அரசியற் பின்புலமும் மிக்க தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கவேண்டுமென்று தாங்கள் முனைப்போடு செயற்படுகின்றமை எமது மாவட்ட மக்கள் மத்தியில் தங்கள் மீதும், தங்கள் நிர்வாக நடவடிக்கைகள் மீதும் அதிருப்தியையும், மனக்கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான எரிபொருள் சேகரிப்பு களஞ்சியசாலை இயங்கி வந்த மேற்படி காணியை தனிநபருக்கு வழங்குவதாயின், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களையும் இணைக்கும், வடக்கு மாகாணத்தின் மத்திய கேந்திர மையமாக உள்ள கிளிநொச்சியில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதான எரிபொருள் சேகரிப்புக் களஞ்சியசாலை மீள இயக்கப்படாதா? என்ற கேள்வியும் எம் மத்தியில் உண்டு.

போரின் விளைவுகளிலிருந்து முழுமையாக மீண்டும் கட்டமைக்கப்படாத கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற, முக்கியத்துவம் மிக்க எண்ணிலடங்கா காணித்தேவைகளைப் புறந்தள்ளி, அரசியல் பின்புலத்தையும், பண பலத்தையும் பயன்படுத்தி இந்த மாவட்டத்தின் வளங்களை அபகரிக்க முற்படும் தனிநபர்களின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த, காணி அதிகாரமுள்ள மாகாண ஆளுநராக தாங்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்களைத் கேட்டுக் கொள்கின்றேன். – என்றுள்ளது.

# 40 அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்க ஐ.எம்.எவ். கோரிக்கை செய்தி உண்மையில்லை

## மறுக்கிறார் ஹர்ஷ டி சில்வா



இலங்கையில் உள்ள 40 அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்குமாறு சர்வதேசநாணயநிதியம்கோரியுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

40 அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குமாறு சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்த கருத்து ஊடகங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் நிதி நிபந்தனையை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பிரேரணையாக முன்வைக்கும் போது அந்த பிரேரணைக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியமோ அல்லது வேறு எந்தத் தரப்பினரோ இலங்கை அரசாங்கத்துக்கு அவ்வாறான நிபந்தனையை விதிக்கவில்லை என ஹர்ஷ டி சில்வா டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டின் நிதி நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்களின் சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது என ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்களை அடக்கி ஒடுக்கவே அவசரகாலச் சட்டம்

## ஐ.நா. நிபுணர்கள் கடும் விசனம்

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி முதல் இலங்கை அரசு, அமைதியான போராட்டக்காரர்களை அடக்கி ஒடுக்குவதற்கும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்களுக்கும் எதிராக அவசரகாலச் சட்டத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்துகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்கள் கண்டித்துள்ளனர்.

தலைநகர் கொழும்பிலும் நாடு முழுவதிலும் பல மாதங்களாக நடைபெற்ற வெகுஜனப் போராட்டங்களைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ, ஜுலை 13 அன்று நாட்டை விட்டு வெளியேறி மறுநாள் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினார். அவருக்குப் பின் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜுலை 17 அன்று மற்றுமொரு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தினார்.

இந்நிலையில், நாடாளுமன்றம் ஜுலை 27ஆம் திகதியன்று தற்போதைய அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்தது.

இதன் மூலம், ஊரடங்கு உத்தரவை விதித்து பாதுகாப்புப் படைகளுக்குப் பரந்த மற்றும் விருப்பமான அதிகாரங்களை வழங்கும் கட்டளைச் சட்டத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்தகைய அதிகாரங்கள், நீதிமன்ற மேற்பார்வையின்றி போராட்டக்காரர்களைத் தடுத்து வைப்பதற்கும், தனியார் சொத்துக்களைச் சோதனை செய்வதற்கும் படையினரை அனுமதிக்கின்றன.

அவசர நடவடிக்கைகளை தவறாகப் பயன்படுத்துவது குறித்து பலமுறை அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அதில் பலனில்லை.

இந்தநிலையில், அமைதியான ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமைகளைச் சட்ட பூர்வமாகப் பயன்படுத்துவதை மீறும் வகையில் இது போன்ற நடவடிக்கைகளைக் கண்டிப்பதாக ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அடக்குமுறை நடவடிக்கைகள் உரையாடலுக்கான வழிகளை மேலும் மூடுகின்றன மற்றும் பதற்றங்கள் அதிகரிக்கும் அரசியல் சூழலை ஏற்படுத்துகின்றன என்று ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்

2022 மார்ச் முதல் இலங்கை எதிர்கொள்ளும் பாரதூரமான பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதில் அரசின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்துவதற்காக ஆயிரக்கணக்கானோர் கொழும்பிலும் நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.




ஆழமடைந்துவரும் பொருளாதார நெருக்கடி ஊழல் குற்றச்சாட்டுகள் அதிகரித்து வரும் பணவீக்கம் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை மற்றும் நீடித்த மின்வெட்டு மற்றும் சட்ட விரோத நிதிப் பாய்ச்சலைச் சரியாக நிர்வகிக்கத் தவறியதன் எதிரொலியாக வெகுஜனப் போராட்டங்கள் வேகத்தைப் பெற்றன.

இதன்போது, பாதுகாப்புப் படையினர் அவசரகால நடவடிக்கைகளால் தங்களுக்கு வழங்கப்பட்ட விரிவான அதிகாரங்களைப் பயன்படுத்தி, கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைகளைப் பயன்படுத்த எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்கினர்.

2022 ஜுலை 22 அன்று தலைநகர் கொழும்பு – காலிமுகத்திடலில் உள்ள போராட்டக்காரர்களின் முகாமில் பொலிஸார் மற்றும் இராணுவத்தின் கூட்டு நடவடிக்கையின்போது 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பலர் கைதுசெய்யப்பட்டனர்.

இதையடுத்துகடந்தவாரங்களில்ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள், எதிர்ப்பாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

இதைக் கண்டித்துள்ள ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள், தேசிய பாதுகாப்பை ஒரு சாக்குப்போக்காகக் கொண்டு கருத்து வேறுபாடுகளின் வெளிப்பாடுகளை மூடிவிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

மனித உரிமைப் பாதுகாவலர்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் அமைதியான போராட்டங்களின் பின்னணியில் பாதுகாக்கப்பட வேண்டும், போராட்டங்களில் பங்கேற்பதற்காக குற்றவியல் பொறுப்பை அவர்கள் எதிர்கொள்ளக்கூடாது என்றும் ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் அரசு மீண்டும் மீண்டும் அவசரகால நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறும் அதற்குப் பதிலாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கு அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இலங்கையர்களுடன் திறந்த மற்றும் உண்மையான உரையாடலை நாடுமாறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்கள் கோரியுள்ளனர்.

# பாடசாலைகளின் மாணவர்களும் பகுதி நேரமாக வேலைசெய்யலாம்

## புதிய சட்டத்தை கொண்டுவருகின்றது அரசாங்கம்

பதினாறு வயது முதல் இருபது வயது வரை உள்ள இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் பகுதி நேரமாக வேலை செய்யும் வகையில் சட்டங்களில் திருத்தம் செய்ய தொழிற்துறை அமைச்சு தயாராகி வருகிறது.

அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், சிறுவர்கள் வேலை செய்யும் சூழலுக்குப் பழக்கப்படுத்தப்படாததால் தொழிற்துறையில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

இந்த வயதிற்குட்பட்ட இளைஞர்கள் மாதத்துக்கு இருபது மணிநேரம் பகுதி நேர வேலைகளைச் செய்யலாம் என்றும் அந்தச் சேவைக் காலத்துக்கு தனியார் நிறுவனங்களும் ஊதியம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதிய சட்ட திருத்தத்தின்படி, பாடசாலை மாணவர்களும் பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும் என்றாலும் நிரந்தர வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடாது என்றும் முறையான பயிற்சி கட்டாயம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஆபத்தான வேலைவாய்ப்புகள் எழுபத்தி இரண்டு இருக்கின்றன எனவும், அவற்றில் பணிபுரிய அவர்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்றும் தொழிற்துறை அமைச்சு கூறியுள்ளது.

பகுதி நேர வேலைவாய்ப்பில், ஈ.பி.எவ். மற்றும் ஈ.ரி.எவ். செலுத்தும் போது பிரச்சினை ஏற்படுவதால், அதற்கான விதிகளிலும் திருத்தம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது.

# பிபிலையில் பஸ் விபத்து! 10 பேர் காயம்

பிபிலையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிபிலை, தொடங்கொல்ல பகுதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார், விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அநுரவால் முடியுமென மக்கள் நம்பிக்கை!

## மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலைய கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

நாடு எதிர்நோக்கும் தற்போதைய நெருக்கடிக்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் தீர்வு காண முடியும் என அதிகளவிலான மக்கள் நம்புகின்றனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு அநுரவால் தீர்வு காண முடியும் என கணக்கெடுப்பில் கலந்து கொண்டவர்களில் 48.5 விகிதமானோர் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது 36.6 விகிதமானோர் நம்பிக்கை கொண்டுள்ள அதேவேளை 29.1 வீதம் பேர் சஜித் பிரேமதாஸ மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்.

23.7 வீதம் டலஸ் அழகப்பெருமவால் நெருக்கடியை தீர்க்க முடியும் என்றும் மேலும் 18.3 வீதம் பிரதமர் தினேஷ் குணவர்தனவால் முடியும் என்றும் வாக்களித்துள்ளனர். இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் தற்போதைய நெருக்கடியை தீர்க்க முடியும் என 11.9 வீதமானோர் நம்புகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம்-88**



உத்தேச ஒப்பந்த வாசகத்தில் மிக முக்கியமான விடயம் – விடுதலை புலிகளை பாதித்த விவகாரம் – ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 72 மணித்தியாலங்களுக்குள் எல்லா ஆயுதக் குழுக்களும் தங்களது ஆயுதங்களைக் களைய வேண்டும் என்பது.

ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற சரத்தைத் தான் மொழிபெயர்த்து விளங்கப்படுத்திய போது பிரபாகரனுக்கு முகம் கோபத்தால் சிவந்தது என்கிறார் பாலசிங்கம்.

அப்பொழுதேயே – அந்த இரண்டு மணி நேரத்துக்கு இடையிலேயே – இந்த ஒப்பந்தத்தை எந்தவிதத்திலும் ஆதரிப்பதில்லை என்ற முடிவுக்கு பிரபாகரன் வந்திருந்தார்.

இரண்டு மணித்தியாலங்களின் பின் டிக்ஸிற் வந்து பதில் யாது என நினைவிய போது, ஒப்பந்தத்தை ஏற்பதில்லை என்று கூறி, அதன் காரணங்கள் விளங்கப்படுத்தப்பட்டன.

தான் ஒப்பந்தத்தின் குறைபாடுகளை விளக்கிய போது, பிரபாகரன் ஆயுதங்களைக் களைய வேண்டும் என இந்தியா கூறுவது முறையேயற்றது, ஏனெனில் உறுதியான – நிரந்தர – சமாதானம் ஏற்பட்டு, தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் வரையும் ஆயுதங்களைக் கையளிக்கவே கூடாது எனப் பிரபாகரனும் தன் குரலைக் கோபமாக உயர்த்திக் கூறினார் என்றும் பாலசிங்கம் குறிப்பிடுகிறார்.

பதினைந்து வருடங்களுக்கு மேல் எவ்வளவோ கஷ்டங்களுக்கும் பலிகளுக்கும் உயிர்த் தியாகங்களுக்கும் இடையே பெறப்பட்ட ஆயுதங்களை 72 மணித்தியாலங்களுக்குள் களைவது என்பது முடியாத காரியம் என அவர் கூறினார்.

தாங்கள் கூறிய காரணங்களை டிக்ஸிற் ஏற்காது, மாகாண சபை முறையே தமிழ் மக்களுக்கு உகந்ததும், கிடைக்கக் கூடியதானதும் எனவும், ஒரு நிரந்தரப் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படுவதாலும், இந்தியப் படைகள் கவனித்து சமாதானம் நிலைப்படுத்தப்பட இருப்பதாலும் போராளிகளின் கைகளில் ஆயுதங்கள் தேவையற்றவை என டிக்ஸிற் கூறினார்.

ஆதலால் தங்கள் தீர்மானங்களை மீளாய்வு செய்து ஆதரவு தர டிக்ஸிற் கேட்ட போதும், அவற்றில் மாற்றம் செய்ய தயாராக இல்லை என பிரபாகரன் தரப்பில் கூறப்பட்டதாம்.

அப்பொழுது டிக்ஸிற் கோபாவேஷமாக இது இரண்டுநாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தம், நீங்கள் ஆதரித்தாலும், விட்டாலும் நிறைவேற்றப்பட்டே தீரும், ஆனால் நீங்கள் எதிர்ப்பதால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்குவீர்கள் எனப் பயம் காட்டினார் எனக் கூறப்பட்டது. விளைவுகள் என்னவென வினவியதற்கு அவர்கள் இதனை ஏற்றுக் கொள்ளும் வரை தங்களது காவலில் வைக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்ட போது, தங்களை எவ்வளவு காலத்துக்கு அப்படி வைத்திருந்தாலும் தாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று யோகியால் தெரிவிக்கப்பட்டது.

அவற்றைத் தொடர்ந்து கோபாவேஷமாக டிக்ஸிற் வெளியேறினார்.

நடந்த சம்பாசணைகளும் வாக்குமூலங்களும் எம்.ஜி.ஆருக்கு விரிவாக விளங்கப்படுத்தப்பட்டன. பிரச்சுனைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று காணும் வரை – எதிரிகளின் படைகள் தமிழ்ப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் வரை – தங்களது ஆயுதங்களைக் கையளிக்குமாறு கேட்பது சரியல்ல, அது பாதகமான விளைவுகளை தோற்றுவிக்கும் என்பது அவர்களது முக்கியமான வாதமாக இருந்தது. மற்றத் தமிழ்த் தரப்புகள் இவற்றை ஒப்புக்கொள்ள வைக்கப்பட்டாலும், தாங்கள் தங்களது லட்சியத்தில் இருந்து சிறிதளவு மாறுவதென்ற எண்ணங்களுக்கே இடமில்லை என்பதையும் தெரிவித்தனர்.

அவற்றைக் கேட்டபின் எம்.ஜி.ஆர். நீங்கள் விரும்பவில்லை என்றால், நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை, தான் பேசுகிறேன் என முடித்தார்.

அவர்கள் எம்.ஜி.ஆரினது அறையை விட்டுவெளியேறிய போது, தாழ்வாரத்தில் இருந்த டிக்ஸிற் எம்.ஜி.ஆர். என்ன சொன்னார் என ஆர்வமாக கேட்டபோது, அவர்கள் பதில் ஏதும் சொல்லாமல் நடந்து சென்றனர் என பாலசிங்கம் கூறுகிறார்.

**இந்திய பிரதமருடனான சந்திப்பு**

28 ஜூலை இந்தியாவின் புலனாய்வாளர் பகுதியினர் நள்ளிரவு – சாமநேரத்தில் – பிரபாகரனையும் பாலசிங்கத்தையும் நித்தரையிலிருந்து எழுப்பி, இந்தியப் பிரதமர் அவசரமான சந்திப்புக்கு அழைக்கிறார் என அவரிடம் கொண்டு சென்ற போது, ராஜீவ் காந்தி அவர்களை வாசலிலேயே சந்தோமாக வரவேற்று, தனது அறைக்குக் கூட்டிச் சென்றார்.

அங்கு புலனாய்வுப் பிரிவின் மூத்த அதிகாரி நாராயணனும், தமிழ்நாட்டின்



உணவு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனும் தங்களுக்காக காத்திருந்தார்கள் என்கிறார் பாலசிங்கம். பாலசிங்கத்தின் வாக்குமூலத்தில் – வார்த்தைகளில் விடயம் பின்வருமாறு அமைகிறது.

"பிரதமரே பேச்சுக்களை பவ்வியமாக முன்னெடுத்து, நாங்கள் ஏன் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கேட்டபோது பிரபாகரன் என்னை அதனை விளங்கப்படுத்துமாறு – எங்களது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்துமாறு – கேட்டார்.

நான் பெரும்பான்மையால் நிர்வகிக்கப்பட்டு, சிறுபான்மையினருக்கு பாதகமான கருத்துக்களை வெளிப்படையாக இல்லாவிட்டாலும் உள்ளகத்தே வேரூன்றி இருப்பதினால், அர்த்தமுள்ள அதிகார பகிர்வு என்பது மத்திய அரசாங்கம் மாகாணங்களும் இப்படியான பெரும்பான்மைக்கு சாதகமாக அரசமைப்பு மூலம் பெற முடியாது என்பதையும், தற்சமயத்தில் அது ஒற்றையாட்சியாகப் பலம் வாய்ந்த நடைமுறை அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு தரப்பட்டு, மத்திய அரசின் கைகளிலேயே இருக்கிறது, ஒப்பந்தத்தில் பாரதூரமான குறைபாடு அது ஒற்றையாட்சியின் அடிப்படையை அங்கீகரிப்பதும், அதனால் அரசியல் நிர்வாக முறைகளுக்கு அடிப்படை மாற்றங்கள் ஏற்படக்கூடிய இடைவெளிகளை அடைப்பதும்தான் என வாதித்தேன். அதேசமயம் மாகாண சபை அமைப்பு முறை, அதிகாரங்கள், பணிகள் என்பவை தெளிவுபடுத்தப்படாவிட்டாலும், விடுதலைப் புலிகள் அதன் அடிப்படைகளாக எடுக்கப்பட்ட டிசம்பர் 19ஆம் திகதி வரவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆனால் ஒப்பந்தம் அந்த அடிப்படையிலேயே இவற்றை தீர்மானிக்கும் என்று கூறுகிறது, தமிழ் தேசம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களது தலையாய கோரிக்கையானாலும், இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணங்கள் என்பது வரவேற்கப்பட்டாலும், அது தற்காலிகமானதனால், பின்னர் எடுக்கப்படும் வாக்கெடுப்பில் அது நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டே ஆகும் என விளக்கினேன். கடைசியாக ஆயுதக் களைவு பற்றியும், ஒரு நிரந்தர தீர்வின்றி தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இன்றியும், அதற்கான உறுதிமொழிகள் ஏதுமின்றியும் இதனைச் செய்வது சரியில்லை என்பதை உணர்ச்சியுடன் கூறினேன்.

எது வித குறுக்கிடலும் இல்லாமல் பிரதமர் பொறுமையாக அவ்வளவையும் கேட்டுக்கொண்டும், தனது நாள்குறிப்பில் சில சில குறிப்புகளை எடுத்துக் கொண்டும் இருந்தார். நீங்கள் ஆதங்கங்க கொள்வதெல்லாம் எனக்கு புரிகிறது எனக் கூறினார் அவர்."

(வளரும்)

